Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 • இதழ் Issue : 112 • ஞாயிற்றுக்கிழமை Sunday • 22.02.2026 • பக்கங்கள் Pages:4 • ₹ 6 • ஈரோடு Erode

செய்தியாளர்கள் தேவை



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

# திமுகவை சீண்டிப்பார்த்தால் தமிழ்நாடே பதிலடி தரும்

## மதுரையில் நடந்த மாநாட்டில் முதலமைச்சர் ஸ்டாலின் பேச்சு



மதுரை : மதுரை உத்தங்குடியில் திமுக தென் மண்டல வாக்குச்சாவடி நிர்வாகிகளுக்கான பயிற்சி மாநாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தொடங்கியது. இந்த மாநாட்டில் தென் மாவட்டங்களைச் சேர்ந்த 58 தொகுதிகளின் 1.9 லட்சம் பாக முகவர்கள் பங்கேற்றுள்ளனர். இந்த மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அமைச்சர் மூர்த்தி வெள்ளி செங்கோல் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், "வீரம் என்றால் அது மதுரைதான்.

பாசம் என்றால் அது மதுரைதான். கோயில் என்றால் அது மதுரைதான்.

சாப்பாடு என்றால் அதுவும் மதுரைதான். இங்கே எல்லாமே FAMOUS தான்.

"உத்தங்குடிமுழுவதும் உடன்பிறப்புகள் குடியேறிவிட்டது போல் எனக்கு உள்ளது. சித்திரைத்திருவிழா போல கூடியிருக்கும் உங்களை பார்த்து பூரிப்பு அடைகிறேன். " மாநாட்டில் திரண்டுள்ள உங்களை பார்க்கும்போது இனி நாம்தான் என்ற நம்பிக்கை அதிகரிக்கிறது. இனி நாம்தான், இனி எப்போதும் நாம்தான் என்ற நம்பிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. "பாக முகவர்களுக்கான மாபெரும் பயிற்சி, கூட்டங்களை மண்டலவாரியாக நானே சென்று நடத்தினேன்.

ஓரணியில் தமிழ்நாடு எனும் மாபெரும் இயக்கத்தை தொடங்கி 1 கோடி குடும்பங்களை உறுப்பினர்களாக இணைத்துள்ளோம்.

"எஸ்.ஐ.ஆரில் இந்தியா முழுக்க பல மாநிலங்களில் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர். தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர் பணிகளின்போது வாக்காளர்களை நீக்கவிடாமல் உழைத்த இயக்கம் திமுக."தேர்தல் களத்தில் நமது வெற்றியை உறுதி செய்ய உள்ளது 7 லட்சம் பாக முகவர்கள்தான். பிப்.27ல் கோவையில் மேற்கு மண்டல பாக முகவர்கள் மாநாடு நடைபெறவுள்ளது.2 மாதங்களில் மட்டும் திமுக 7 மாநாடுகளை நடத்தியுள்ளது.

"பூத் அளவில் நம்மை போன்று வலிமையாக உள்ள கட்சி இந்திய அளவில் இல்லை. மக்களுக்காக உருவான இயக்கம் திமுக; நமது இயக்கத்தை தொட்டுப் பார்க்க நினைத்தால் தமிழ்நாடே பதிலடி தரும். "திமுகவின் சாதனை, யாராலும் தோற்கடிக்க முடியாத சாதனையாக இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் அனைத்து இடங்களிலும் திமுக கொள்கைகள்தான் எதிரொலிக்கிறது.

"2024 மக்களவை தேர்தலில் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வெற்றியை மக்கள் நமக்கு வழங்கினர். திமுக கூட்டணிக்கு வெற்றிமேல் வெற்றிதான்.

"200 தொகுதிகளுக்கும் கூடுதலாக வெற்றி பெறுவதே நமது லட்சியம். அடுத்த 2 மாதங்களுக்கு உங்களுக்கும் சரி எனக்கும் சரி No Rest. வாக்குபதிவு அன்று பூத்துக்கு வந்து வாக்காளர்கள் நமக்கு வாக்கு செலுத்தும் வரை ஓய்வே இருக்க கூடாது.

"திமுக அரசின் சாதனை திட்டங்களை ஒவ்வொரு வீட்டுக்கும் கொண்டுசெல்லவேண்டும். மகளிர் உரிமைத் தொகையை ரூ.2,000ஆக உயர்த்திருக்கிறோம்.

"மகளிர் உரிமைத் தொகையை முடக்க நினைத்த சதியை முறியடித்து ரூ.5,000 வழங்கி உள்ளோம். சமூகத்தில் உள்ள அனைத்து தரப்பினரையும் கவனத்தில் கொண்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம்.

"மார்ச் 1ல் வரும் பிரதமரிடம் மதுரைக்கு ஏன் மெட்ரோ ரயில் திட்டத்தைதரவில்லைஎன்று கேட்கவேண்டும். ஏன் தமிழ்நாட்டுக்கு எந்த சிறப்புத் திட்டங்களும் தரவில்லை என்று பிரதமரிடம் மக்கள் கேட்க வேண்டும். கீழடி அகழாய்வு அறிக்கையை ஏன் வெளியிடவில்லை என்று பிரதமரிடம் நீங்கள் கேட்க வேண்டும்," இவ்வாறு தெரிவித்தார்.

# இந்தியாவுக்கான இறக்குமதி வரி 10 சதவீதம் பிப்.24 முதல் அமல்: வெள்ளை மாளிகை தகவல்



வாஷிங்டன் டி.சி.: அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விதித்த உலகளாவிய வரி விதிப்பு சட்டவிரோதமானது என அந்நாட்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், வேறு ஒரு சட்டப் பிரிவின் கீழ் இந்தியாவுக்கான வரியை 10% என்ற அளவில் அதிபர் நிர்ணயித்துள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், சர்வதேச அவசரகால பொருளாதார அதிகாரச் சட்டத்தின் (ஐஇஇபிஏ) கீழ், பரஸ்பர வரி விதிப்பு முறையை கொண்டு வந்தார். இந்த சட்டத்தின் கீழ், பல்வேறு நாடுகளுக்கும் அந்த நாடுகளை அச்சுறுத்தும் வகையில் வரிகளை விதித்தார்.

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதி செய்ததால், இந்தியா மீதான வரியை 50% ஆக உயர்த்தினார். இதுபோல், பல நாடுகளுக்கும் அவர் வரியை நிர்ணயித்தார். அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் இவ்வாறு வரி விதிக்கப்பட்டதை எதிர்த்து 'லேர்னிங் ரிசோர்சஸ், வி.ஓ.எஸ் செலக்சன்ஸ் என்ற நிறுவனங்கள் வழக்கு தொடர்ந்தன. இதை விசாரித்த உச்சி நீதிமன்ற தலைமை நீதிபதி ஜான் ராபர்ட்ஸ் தலைமையிலான அமர்வு, வரிகளை விதிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உள்ளது; ஐஇஇபிஏ சட்டம் அதிபருக்கு வரிகளை விதிக்க அனுமதி அளிக்கவில்லை என்று கூறியது. இதனால், ட்ரம்ப் விதித்த வரிகள் முடிவுக்கு வந்ததாகக் கருதப்பட்டது. இந்நிலையில், 1974ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட வர்த்தக சட்டத்தின் பிரிவு 122ன் கீழ், 150 நாட்களுக்கு பயன்படுத்துவதற்கான தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி டொனால்டு ட்ரம்ப் அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொண்ட நாடுகளுக்கான வரி 10% ஆக இருக்கும் என அறிவித்தார். இந்தியா உடனான வர்த்தக ஒப்பந்தம் இன்னும் கையெழுத்தாகாத நிலையில், இந்தியாவுக்கான இறக்குமதி வரி எவ்வாறு இருக்கும் என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த டொனால்ட் ட்ரம்ப், "எதுவும் மாறாது. அவர்கள் வரிகளைச் செலுத்துவார்கள். நாங்கள் வரிகளை செலுத்த மாட்டோம். இது முன்பு இருந்ததற்கு நேர்மாறானது. பிரதமர் மோடி ஒரு சிறந்த மனிதர். அவரை எதிர்க்கும் மக்களைவிட அவர் புத்திசாலி. அவர் எங்களை தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டிருந்தார். எனவே, நாங்கள் இந்தியாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்தோம். அது இப்போது ஒரு நியாயமான ஒப்பந்தம். அவர்கள் வரி செலுத்துகிறார்கள். நாங்கள் வரிகளை செலுத்த மாட்டோம். இந்தியா உடனான ஒப்பந்தம் தொடங்கிவிட்டது. அனைத்து ஒப்பந்தங்களும் தொடங்கி உள்ளன" என தெரிவித்தார்.

இந்தியா உடனான தனது உறவு குறித்த கேள்விக்கு, "இந்தியா உடனான எனது உறவு அற்புதமானது. நாங்கள் இந்தியாவுடன் வர்த்தகம் செய்கிறோம். இந்தியா, ரஷ்யாவில் இருந்து வெளியேறியது. இந்தியா, ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்கிக் கொண்டிருந்தது. எனது வேண்டுகோளின்படி அவர்கள் பின்வாங்கினர். ஏனெனில், நாங்கள் அதை (உக்ரைன் போர்) தீர்க்க விரும்புகிறோம்" என தெரிவித்தார். இந்நிலையில், வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிவிப்பில், "அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்ட அனைத்து நாடுகளுக்குமான தற்காலிக வரி 10% ஆக குறைகிறது. இந்தியாவுக்கும் இது பொருந்தும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "எத்தனைத் தொகுதிகள் கேட்போம் என இப்போது சொல்ல முடியாது" கமல்ஹாசன் எம்.பி. பேட்டி



"திமுக கூட்டணி ஒற்றுமையை நோக்கி நகர்கிறது. அனைவரும் கூட்டணிக்கு வர வேண்டும்" என கமலஹாசன் எம்.பி கருத்து தெரிவித்தார்.

மதுரை காந்தி மியூசியத்தில் மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில், 'காந்தியை மறவோம்' என்ற நிகழ்ச்சி நடந்தது.

இதில் பங்கேற்க மக்கள் நீதி மய்யம் கட்சித்தலைவர் கமல்ஹாசன் எம்.பி தனி விமான மூலம் மதுரை வந்தடைந்தார்.

அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "கூட்டணி பேச்சுவார்த்தை நடக்கவில்லை. அதில் எனக்கும் கடமை உள்ளது. இதை மனதில் வைத்து பேச்சுவார்த்தை நடைபெறும் என நம்பிக்கை உள்ளது. எத்தனைத் தொகுதிகள் கேட்போம் என இப்போது சொல்ல முடியாது. எப்படியும் நாங்களே வெளியிடுவோம். முக்கியமான விஷயம், கூட்டணியில் ஒற்றுமையும், நோக்கமும்தான். அவை எங்களுக்குள் தெளிவாகவே உள்ளது. இதை நோக்கியே நகர்கிறோம்" என்று கூறினார். திமுக கூட்டணிக்கு ஓபிஎஸ் வருவதாக கிடைக்கும் தகவல் குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு, "கூட்டணிக்கு அனைவரும் வருக... தமிழகம் வெல்க" என்றார்.

# தவெக தேர்தல் கண்காணிப்பாளர்களை தலைவர் விஜய் நியமித்தார்!



சென்னை:

சட்டசபை தேர்தலுக்கான கண்காணிப்பாளர்களை நியமித்து தவெக தலைவர் விஜய் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். ஆனந்த், செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா ஆகியோர் தலைமையில் தேர்தல் பணிகளுக்கான கண்காணிப்பாளர்களை நியமித்து உத்தரவிட்டுள்ளார் விஜய். இது குறித்து தவெக தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வருகின்ற சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தமிழக வெற்றிக்கழகம் சார்பில், தேர்தல் பணிகளைக் கண்காணிக்க, சட்டமன்றத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். சட்டமன்றத் தேர்தல் முதன்மைக் கண்காணிப்பாளர்களாக என். ஆனந்த், கே.ஏ. செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா நியமிக்கப்பட்டுள்ளனர். எனது நேரடி ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின்படி இந்தத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் இயங்குவார்கள். தலைமைக் கழக மையத் தேர்தல் அலுவலகத்தின் (Headquarters Central War Room) துணையுடன் தலைமைக் கழகம் அளிக்கும் நெறிமுறைகளுக்கு உள்பட்டு இவர்கள் செயல்படுவார்கள். மாவட்ட வாரியாகவும் தொகுதி வாரியாகவும் தயாரிப்புப் பணிகள் மற்றும் செயல்வீரர்கள் கூட்டங்களை இவர்கள் ஒருங்கிணைப்பார்கள்" எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களுக்கு ஆதவ் அர்ஜூனாவும், சேலம் மாவட்டத்துக்கு அருண்ராஜ் உள்ளிட்டோரும் தேர்தல் கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். திருவள்ளூர் மாவட்டத்துக்கு ஜேசிடி பிரபாகர், கிருஷ்ணகிரி, தருமபுரி, நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர் ஆகிய மாவட்டங்களுக்கு சத்தியபாமா கண்காணிப்பாளராக நியமிக்க ப்பட்டுள்ளனர். தஞ்சாவூர், திருவாரூர், கரூர், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு கண்காணிப்பாளராக முன்னாள் அமைச்சர் கு.ப.கிருஷ்ணன், மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களுக்கு தேர்தல் கண்காணிப்பாளராக சிடிஆர் நிர்மல்குமார், புதுச்சேரிக்கு சாமிநாதன் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# ஊத்தங்கரையில் கால்நடை பராமரிப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் விவசாயிகளுக்கு கால்நடை பராமரிப்பு துறை சார்பில் கால்நடை பராமரிப்பு மற்றும் தொழில்நுட்ப குறித்த ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது, கால்நடை பராமரிப்புத்துறையின் மண்டல இணை இயக்குனர் டாக்டர் மோகன் குமார், உதவி இயக்குனர் டாக்டர் ஜே மகேந்திரன் ஆகியோரின் ஆலோசனை பேரில் நடைபெற்ற இந்த பயிற்சி கூட்டத்தில் மருத்துவர்கள் முத்தமிழ் செல்வன், சத்ரியன் ஆகியோர் பயிற்சி வழங்கி, கால்நடை பராமரிப்பு துறை சம்பந்தமாக கையேடு,தாது உப்பு, தீவன சோள விதைகள்,மண்புழு உரம் ஆகியவற்றை விவசாயிகளுக்கு வழங்கினர்,

இதில் ஊத்தங்கரை, சிங்காரப்பேட்டை, கல்லாவி, காரப்பட்டு ,வீரணகுப்பம்,திருவணப்பட்டி,செங்கழுநீர் பட்டி, உப்பாரப்பட்டி,காட்டேரி, ஆண்டியூர் ஆகிய ஊராட்சியில் இருந்து ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர், கால்நடை மற்றும் பராமரிப்புத்துறை உதவியாளர்கள் அனிதா, குரு ராஜ் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

# தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கலந்துரையாடல் நடந்தது



தேவகோட்டை -சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் , பெற்றோர் ஆசிரியர் கலந்துரையாடல் நடந்தது. இதில் பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர் கலந்து கொண்டனர். தலைமையாசிரியர் லெ .சொக்கலிங்கம் பெற்றோர்களிடம் பேசும்போது, பெற்றோர்கள் அனைவரும் பள்ளி முடிந்து வந்தவுடன் உங்கள் குழந்தைகளிடம் மனம் விட்டு பேசுங்கள். பள்ளியில் நடந்த நிகழ்வுகளை காது கேளுங்கள். உங்களின் குழந்தைகளுக்காகத்தான் நீங்கள் கடுமையானவேலைகள்பார்த்து உழைத்து சம்பாதிக்கிறீர்கள் . அவர்கள் மனதில் இருப்பவற்றை உங்களிடம் இயல்பாக பேச சொல்லுங்கள். தினமும் குறைந்தது 30 நிமிடங்களாவது அவர்கள் பேசுவதை காது கொடுத்து கேளுங்கள்.மனம்விட்டு பேச சொல்லுங்கள். அப்போதுதான் நிகழ்காலமும், எதிர்காலமும் நன்றாக இருக்கும், உங்கள் குழந்தைகளை இளம் வயதிலேயே நல்வழிபடுத்த நல் வாய்ப்பாக அமையும்.என்று பேசினார்.பெற்றோர்கள் பலரும் பள்ளியில் நடைபெறும் நிகழ்வுகளை பாராட்டி பேசினார்கள். ஆசிரியர்கள் ஸ்ரீதர், முத்துலெட்சுமி ஆகியோர் நிகழ்விற்கான ஏற்பாடுகளை செய்து இருந்தனர். சிறப்பாக பேசிய பெற்றோர்கள் உஷா மற்றும் நாகராஜ் ஆகியோருக்கு பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டது . பள்ளியின் சிறப்புகள் குறித்து மாணவி நந்தனா பேசினார்.

# காரைக்குடியில் NDA கூட்டணியின் போதை எதிர்ப்பு கண்டன ஆர்ப்பாட்டம்




சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் தமிழகமாநிலபாரதிய ஜனதா கட்சி தலைவர் நயினார் நாகேந்திரன் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாநில இளைஞரணி தலைவர் டாக்டர் எஸ்.ஜி. சூர்யா தலைமையில், போதை கலாச்சாரத்தை ஒழிக்க வலியுறுத்தி NDA கூட்டணியின் கண்டன ஆர்ப்பாட்டம் 21.02.2026 அன்று காரைக்குடி ஐந்து விளக்கு பகுதியில் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சிவகங்கை மாவட்ட பாஜக தலைவர் பாண்டித்துரை கலந்து கொண்டார். மேலும் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் மாவட்ட செயலாளர் தேர்போகி பாண்டி மற்றும் அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்ற கழகம் சார்பில் காரைக்குடி நகர் செயலாளர் மெய்யப்பன் உள்ளிட்ட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

அவர்களின் வழிகாட்டுதலின்படி, பாஜக இளைஞரணி மாவட்ட தலைவர் கௌதம் முனியசாமி தலைமையில் இளைஞர்கள் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இதில் மாநில பாஜக செயலாளர் கதலி நரசிங்க பெருமாள், இளைஞரணி மாநில துணைத் தலைவர் வெற்றிவேல் முருகன் உள்ளிட்ட பாஜக மற்றும் இளைஞரணி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு உரையாற்றினர். போதைப் பழக்கத்திற்கு எதிராகசமூக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தி நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டம் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தது.



# வேப்பூர் அருகே தாய்மொழி தின விழா குழந்தைகளுக்குத் தூய தமிழில் பெயர் சூட்டிய பெற்றோர்களுக்குப் பாராட்டு

கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள நல்லூர் ஸ்ரீ பாலாஜி மேல்நிலைப் பள்ளியில் உலகத் தாய்மொழி தினத்தை முன்னிட்டு, விருத்தாசலம் ரோட்டரி சங்கம் மற்றும் நல்லூர் ஸ்ரீபாலாஜிமேல்நிலைப் பள்ளி இணைந்து,குழந்தைகளுக்குத் தூய தமிழில் பெயர் சூட்டிய பெற்றோர்களைக் கௌரவிக்கும் "பெற்றோர்களைக் கொண்டாடுவோம்" எனும் நெகிழ்ச்சியானபாராட்டு விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

நல்லூர் ஸ்ரீ பாலாஜி மேல்நிலைப்பள்ளியின் தாளாளரும், விருத்தாசலம் ரோட்டரி சங்கத் தலைவருமான அன்புகுமரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், ப்ரீ கேஜி முதல் ஒன்பதாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களில் செல்வி. செல்வநாயகி, சூரியவரதன், மகிழ்இசை, அறிவுஅமுதன், இளமொழி, தமிழினி, புகழேந்தி, கவின், செழியன், வெற்றிவேல் மற்றும் அறிவுக்கரசு உள்ளிட்ட 109 மாணவர்களின் பெற்றோர்கள்,தங்கள் குழந்தைகளுக்குத் தமிழ் மணக்கப் பெயர் சூட்டி மொழிப்பற்றை வெளிப்படுத்தியமைக்காகச் சிறப்பிக்கப்பட்டனர்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்ற பாரதியின் வரிகளுக்கேற்ப நடைபெற்ற இந்த விழாவில், தமிழ்ப் பண்பாட்டையும் மொழி உணர்வையும் அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் நோக்கில் அமைந்த இந்நிகழ்வு அனைவரின் பாராட்டையும் பெற்றது.

# தென்காசி மாவட்டம் சுரண்டையில் பாரதிய ஜனதா கட்சியின் மாவட்ட பிரச்சார பிரிவு மாவட்டத் தலைவர் சங்கரநாராயணன் தலைமையில் மத்திய அரசின் 12 ஆண்டு கால சாதனைவிளக்க பொதுக்கூட்டம்




தென்காசி மாவட்டம் சுரண்டையில் பாரதிய ஜனதா கட்சியின்மாவட்ட பிரச்சார பிரிவு மாவட்டத் தலைவர் சங்கரநாராயணன் தலைமை யில் மத்திய அரசின் 12ஆண்டு கால சாதனை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சி யில் பிரச்சார பிரிவு செயலாளர்ராயல்ராமசாமி வரவேற்புரையாற்றினார்.சிறப்புரை தலைவர் ஆனந்தன் அய்யா சாமி மற்றும் பிரச்சார பிரிவு மாநில தலைவர்பாண்டியராஜன் பிரச்சார பிரிவு மாநில துணைத்தலைவர் விவேகானந்தன் மாநில செயலாளர் கமுதி பாண்டியன் பொருளாளர் கோதை மாரியப்பன் முன்னாள் மாவட்ட தலைவர் ராமராஜா மாவட்ட செயலாளர் அருணாசலம் சுரண்டை நகர தலைவர் கணேசன் பிரச்சாரபிரிவுமாவட்ட செயலாளர் பேச்சிமுத்து நகர பொதுச்செயலாளர் வல்லபதினேஷ் நகர பொருளாளர்ராஜமுருகேஷ்நகர செயலாளர் யோகராஜன் மற்றும் மாநில மாவட்ட நகர நிர்வாகிகள் மற்றும் தாமரை சொந்தங்கள் கலந்துகொண்டுசிறப்பித்தனர்.

நன்றியுரை பிரச்சார பிரிவு நகர தலைவர் குமார். தாயக பணியில்.. ராயல் ராமசாமி மாவட்டச் செயலாளர். பிரச்சார பிரிவு. தென்காசி மாவட்டம்.

## கோவை அரசூர் பகுதியில் உள்ள கேபிஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்

# எலெகன்சா 26 எனும் தலைப்பில் நடைபெற்ற கலை விழா நிகழ்ச்சியில் பல்வேறு திறன்களை வெளிபடுத்திய மாணவர்கள்




கோவை அரசூர்பகுதியில் உள்ள கேபிஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியின் ஆடை வடிவமைப்புமற்றும்துகிலியல் துறையானது அனைத்துக் கல்லூரிகளுக்கிடையேயான எலெகன்சா 26 எனும் கலை விழா நடைபெற்றது

இந்நிகழ்விற்குக் கல்லூரியின் முதல்வர் முனைவர் கீதா தலைமையேற்று, "கலையார்வமே மாணவர்களைச் சிந்தனையாளனாக மாற்றும்" எனக் கூறினார். இக்கலைவிழாவில் கலந்துகொண்டோரை ஆடை வடிவமைப்பு மற்றும் துகிலியல் துறையின் தலைவர் முனைவர் ரம்யா வரவேற்று வரவேற்புரை வழங்கினார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தின ர்களாக ஃபேஷன் வடிவமைப்பாளர் மற்றும் நடன அமைப்பாளர் அருண் பாலகிருஷ்ணா மற்றும் டிரெண்ட் ஃபோர்காஸ்டர் வர்ஷா சி.கே நூலின் கதை நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் ஃபேஷன் வடிவமைப்பாளர் கௌஷிகா குமரேசன் கலந்துகொண்டு மாணவர்களை ஊக்குவித்தனர். எலெகன்சா 26 நிகழ்வில் சிகையல ங்காரம், முகவோவியம், நகஅலங்காரம்,லோகோ உருவாக்கம், மெஹந்தி, பாரம்பரிய ஆடைக்கண்காட்சி மற்றும் அணிவகுப்பு, மறுசுழற்சிப் பொருட்கள் உருவாக்கும், கலைத்திறனு டன் கூடிய நிபுணத்துவ வெளிப்பாடு எனப் பல்வேறு போட்டிகள் நடைபெற்றது.

இந்நிகழ்வின் வெற்றியாளர்களுக்கு மிஸ்டர் அண்ட் மிஸ் எலெகன்சா 26, சிறந்த தனித்துவச் சிந்தனை யாளர், சிறந்த கலைப்பொருள், சிறந்த புதுமை வித்தகர் முதலிய விருதுகளும் 50,000 மதிப்பிலான பரிசுகளும் வழங்கப்பட்டன. கலைநயத்தை மேம்படுத்தும் நோக்கில் நடைபெற்ற இந்நிகழ்வில் 30 கல்லூரிகளைச் சேர்ந்த 400 மாணவர்கள் கலந்துகொண்டு தம் திறனை வெளிப்படுத்தினர்.

# சென்னையில் நடைபெற்ற எஸ்.எஸ்.எப்.ஐ 25 ஆவது தேசிய ஸ்பீடு ஸ்கேட்டிங் சாம்பியன்ஷிப்

## கோவையை சேர்ந்த, ஸ்வஸ்திகா ஸ்பீடு ஸ்கேட்டிங் அகாடமி யை சேர்ந்த 12 வயது வீரர் தங்கம், வெள்ளி பதக்கம் வாங்கி சாதனை




சென்னை பட்டினபப்பாக்கம் பகுதியில், உள்ள, ஜவஹர்லால் நேரு விளையாட்டு மைதானத்தில், இந்திய ஸ்பீடு ஸ்கேட்டிங் சம்மேளனம் சார்பில் 25–ஆவது தேசிய ஸ்பீடு ஸ்கேட்டிங் சாம்பியன்ஷிப் போட்டிகள், கடந்த ஜனவரி மாதம், 31ம் தேதி முதல் பிப்ரவரி 2ம் தேதி வரை, நடைபெற்றது. இதில் தமிழ்நாடு உள்ளிட்ட 24 மாநிலங்களைச் சேர்ந்த வீரர்கள் கலந்து கொண்டனர். இதில் கோவையை ஸ்வஸ்திகா ஸ்பீடு ஸ்கேட்டிங் அகாடமி யை சேர்ந்த 12 வயது வீரர் ரியான், கலந்து கொண்டு, 12 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில், 2 தங்கப் பதக்கங்களையும், 1 வெள்ளிப் பதக்கத்தையும் வென்றதுடன்,

12 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் அதிகபட்ச மதிப்பெண்கள் பெற்றதுடன்,தனிநபர் சாம்பியன்ஷிப் கோப்பையையும் கைப்பற்றினார். மேலும், சர்வதேச ஸ்கேட்டிங் போட்டிக்காகவும் ரியான் தேர்வு செய்யப்பட்டார். குறிப்பாக 400 மீட்டர் போட்டியில், தங்கமும், 200 மீட்டர் பிரிவில், வெள்ளியும், ரிலே பிரிவில், தங்கமும் வென்று சாதனை படைத்தார் அவ்வாறு சாதனை படைத்த மாணவருக்கு கோவையில் உற்ச்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மேலும் மாணவரின் வெற்றிக்கு அயராது பாடுபட்டு பல்வேறு பயிற்சிகளை வழங்கிய ஸ்வஸ்திகா ஸ்பீடு ஸ்கேட்டிங் அகாடமி பயிற்சியாளர்கள், சத்யா, பிரகாஷ், பிரசாந்த், ஆகியோருக்கும், வெற்றி பெற்ற மாணவருக்கும், அகாடமியில் பயிற்சி பெறும் சக மாணவர்கள், பொதுமக்கள், பெற்றோர்கள் என பலரும் வாழ்த்துக்களை தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருக்கோவிலூர்

## இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை மாவட்ட செயலாளர் சிறுத்தை அமுதா, வி.சி.க. தலைவர் திருமாவளவன் அறிவிப்பு



விழுப்புரம் மேற்கு மாவட்டம் திருக்கோவிலூர் வடக்கு வீதி கீழையூரை சார்ந்த சிறுத்தை அமுதா இவர்கள் மாற்று சமுதாயத்தை சார்ந்த தன்னை 10 ஆண்டுகளுக்கு முன்பாக விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இனைத்து கொண்டு கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் கொள்கை கோட்பாடுகளை ஏற்று அனைத்து சமூகத்தினருக்கும் மற்றும் வஞ்சிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக பணியாற்றி வந்தார்.

இவரின் கட்சி பணியினை பாராட்டி வாழ்த்துக்கள் தெரிவித்த திருமாவளவன் அவர்கள் கட்சியின் வளர்ச்சி மேம்படுத்த விழுப்புரம் மேற்கு மாவட்டம் திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி மாவட்ட இளம் சிறுத்தை எழுச்சி பாசறை மாவட்ட செயலாளராக அறிவிப்பு செய்துள்ளார் பொறுப்பு வழங்கியதை அடுத்து கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரையும் அரவணைப்பு செய்து புரட்சியாளர் அம்பேத்கர்அவர்களின்சிலைக்குமாலைஅணிவித்து மரியாதை செலுத்தினார் இதனைத் தொடர்ந்து நிர்வாகிகள்மற்றும்பொதுமக்கள்சமூகஆர்வலர்கள் அனைவரும்சமூகவலைத்தளங்களில்வாழ்த்துக்கள் தெரிவித்து வருகின்றனர்

# தோவாளை சந்தையில் பூக்கள் விலை வீழ்ச்சி



கன்னியாகுமரி: தோவாளை சந்தையில் மல்லிகை, பிச்சி உள்ளிட்ட பூக்களின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. நேற்று ஒரு கிலோ பிச்சிப்பூ ரூ. 1,600க்கு விற்கப்பட்ட நிலையில் இன்று ரூ.650க்கு விற்கப்படுகிறது. நேற்று ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.900க்கு விற்கப்பட்ட நிலையில் ரூ.600க்கு விற்கப்படுகிறது.

# ஈரோடு திண்டல் வேலாயுதசாமி கோவில் கும்பாபிஷேகம்: போக்குவரத்து மாற்றம் ஈரோடு மாவட்ட காவல்துறை அறிவிப்பு



ஈரோடு மாவட்டம் திண்டல் மலை அருள்மிகு வேலாயுதசாமி திருக்கோவில் கும்பாபிஷேக திருக்குட நன்னீராட்டு பெருவிழா வரும் மாசி 10ம் நாள் (22.02.2026) நடைபெற உள்ளது.

இவ்விழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்வார்கள் என்பதால், பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க ஈரோடு மாவட்ட காவல்துறை சார்பில் விரிவான போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்த மாற்றங்கள் வரும் 21-ம் தேதி இரவு 10.00 மணி முதல் கும்பாபிஷேக விழா முடிந்து பக்தர்கள் கூட்டம் குறையும் வரை நடைமுறையில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து வழித்தட மாற்றங்கள்:

1) பெருந்துறை வழியாக ஈரோடு நகரத்திற்கு வரும் அனைத்து இலகு மற்றும் கனரக வாகனங்கள் மேட்டுக்கடை, நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி நால்ரோடு வழியாகச் செல்ல வேண்டும். 2) அதேபோல், பெருந்துறை வழியாக கரூர், நாமக்கல், திருச்சி மாவட்டங்களுக்குச் செல்லும் வாகனங்கள் திண்டல் கபே ரிங்ரோடு வழியாக ரங்கம்பாளையம், ஆணைக்கல்பாளையம், முத்துக்கவுண்டன்பாளையம் மற்றும் பரிசல்துறை நால்ரோடு வழியாகத் திருப்பி விடப்பட்டுள்ளன.

3) ஈரோடு நகரத்திலிருந்து திருப்பூர் மற்றும் கோவை நோக்கிச் செல்லும் வாகனங்கள் வீரப்பம்பாளையம் பிரிவு வழியாக வில்லரசம்பட்டி நால்ரோடு, நசியனூர் வழியாக கோவை தேசிய நெடுஞ்சாலையை அடையலாம். வாகன நிறுத்துமிடங்கள்:

1) பக்தர்களின் வசதிக்காகப் பல்வேறு இடங்களில் வாகன நிறுத்துமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

2) ஈரோடு நகரத்திலிருந்து வரும் வாகனங்கள் BVB மெட்ரிக் பள்ளி வளாகம், சுப்பிரமணி தோட்டம் மற்றும் மாணிக்கம் தோட்டம் பகுதிகளில் நிறுத்தப்பட வேண்டும்.

3) பெருந்துறை மற்றும் வில்லரசம்பட்டி பகுதிகளிலிருந்து வரும் வாகனங்கள் அருள் நகர், காந்தி பழக்கடை பின்புறம், வேளாளர் கல்லூரி வாகன நிறுத்துமிடம், யாழி அப்பார்ட்மெண்ட் அருகில், கீதாஞ்சலி பள்ளி மைதானம் மற்றும் யுனைடெட் ஸ்போர்ட்ஸ் அகாடமி ஆகிய இடங்களில் நிறுத்தப்பட வேண்டும்.

இந்த போக்குவரத்து மாற்றங்களுக்குப் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஈரோடு மாவட்ட காவல்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

# தூத்துக்குடியில் மாற்றுத்திறனாளிகளுக்கான நவீன பூங்காவாக அமைய கனிமொழி எம்.பி. ஆய்வு; 34வது வார்டு கவுன்சிலர் கோரிக்கை ஏற்பு




தூத்துக்குடி மாநகராட்சி 34வது வார்டு தேவகி நகர் சிறுவர் விளையாட்டு பூங்காவினை மாற்றுத்திறனாளிகள் பூங்காவாக மாற்றுவது தொடர்பாக கனிமொழி நேரில் ஆய்வு செய்தார். தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட 34வது வார்டு தேவகி நகர் பகுதியில், பூங்கா அமைப்பதற்கான திட்டமானது, 34வது வார்டு கவுன்சிலர் சந்திரபோஸ் முன்வைத்த கோரிக்கையைத் தொடர்ந்து பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பொதுமக்களின் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் நலன்கருதி அவர்விடுத்த கோரிக்கையை ஏற்று, இதற்கான இடத்தை கனிமொழி எம்பி, அமைச்சர் கீதாஜீவன் மற்றும் அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

மாற்றுத்திறனாளிகளின் வசதிக்காக அதிநவீன உபகரணங்கள் மற்றும் நடைபயிற்சி தளங்களுடன் இந்த பூங்கா அமையவுள்ளது. பணிகள் நிறைவடைந்ததும் மக்கள் பயன்பாட்டிற்கு மிகவிரைவில் இது கொண்டு வரப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். ஆய்வின் போது மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, ஆணையர் ப்ரியங்கா, 34வது வார்டு கவுன்சிலர் சந்திரபோஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

# தமிழக சட்டசபை தேர்தல் விரைவில் அறிவிக்கப்பட உள்ள நிலையில் தேர்தல் ஆணையத்தின் விதிமுறைப்படி ஒரே இடத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தவர்கள் மற்றும் சொந்த மாவட்டத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இடமாற்றம்



தமிழக சட்டசபை தேர்தல் விரைவில் அறிவிக்கப்பட உள்ள நிலையில், தேர்தல் ஆணையத்தின் விதிமுறைப்படி ஒரே இடத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தவர்கள் மற்றும் சொந்த மாவட்டத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, கோவை சரகத்தில் கோவை, திருப்பூர், நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் பணியாற்றும் 33 ஆய்வாளர்களை கோவை சரக டி.ஐ.ஜி சசிமோகன் இடமாற்றம் செய்து உத்தரவிட்டுள்ளார். இதில் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த 17 ஆய்வாளர்கள் அடங்குவர். இதன்படி, ஈரோடு டவுன் சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் அனுராதா நீலகிரி மாவட்டம் ஊட்டி டவுன் மேற்கு பகுதிக்கும், வீரப்பன்சத்திரம் செந்தில் பிரபு கோத்தகிரிக்கும், சூரம்பட்டி வைரம் நீலகிரி சைபர் கிரைம் பிரிவுக்கும், மொடக்குறிச்சி மணிகண்டன் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் நிலையத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர். பெருந்துறை மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ராஜேஸ்வரி ஈரோடு டவுன் சட்டம் ஒழுங்கு பிரிவிற்கும், சித்தோடு அமிர்தலிங்கம் கடத்தூருக்கும், கொடுமுடி சரவணன் திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூருக்கும், காஞ்சிகோவில் ஜெகநாதன் கொடுமுடிக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், கடத்தூர் அரவிந்தராஜன் கோபிக்கும், கோபி ஆய்வாளர் தமிழரசு திருப்பூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுக்கும், அம்மாபேட்டை கவிதா நீலகிரி ஊட்டி ரூரல் சர்க்கிளுக்கும் மாற்றப்பட்டுள்ளனர். ஊட்டி டவுன் மேற்கு தாமோதரன் மொடக்குறிச்சிக்கும், மேட்டுப்பாளையம் சின்னகமணன் வீரப்பன்சத்திரத்திற்கும், அவிநாசி மகளிர் நிலைய சாந்தி பெருந்துறைக்கும், பெருமாநல்லூர் சட்டம் ஒழுங்கு விநாயகம் சித்தோடு நிலையத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர். காத்திருப்போர் பட்டியலில் இருந்த அர்ஜூன்குமார் சூரம்பட்டிக்கும், வெங்கடேசன் ஆசனூருக்கும், மகேஸ்வரி அம்மாபேட்டைக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர். திருப்பூர் குற்ற ஆவண பாதுகாப்பக பிரிவு கலையரசி காஞ்சிகோவிலுக்கும், பெரியநாயக்கன்பாளையம் மகளிர் ஆய்வாளர் இந்திரை சோபியா ஈரோடு மகளிர் நிலையத்திற்கும், திருப்பூர் கொங்கு நகர் போக்குவரத்து பிரிவு முருகேசன் ஈரோடு தெற்கு போக்குவரத்து நிலையத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர்.



# தூத்துக்குடியில் பக்கிள் ஓடை விரிவாக்கப் பணி உட்பட பல்வேறு பணிகளை கனிமொழி எம்.பி. துவக்கி வைத்தார்

தூத்துக்குடி சிவந்தாகுளம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதாஜீவன், மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், முன்னிலையில் பல்வேறு திட்டப்பணி களைத் திறந்து வைத்தார். செல்சீனி காலனி மற்றும் திரவியரத்தின நகர் ஆகிய பகுதிகளுக்கான புதிய நியாயவிலைக்கடைகள் மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டன. என்எல்சி தமிழ்நாடு பவர் லிமிடெட் (NTPL) நிறுவனத்தின் சமூகப்பொறுப்பு நிதியின் கீழ், ரூபாய் 94.57 இலட்சம் மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டுள்ள அதிநவீன கழிப்பறை கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. தூத்துக்குடி மாநகராட்சி, வி.வி.டி சாலை - பண்டுகரை சாலை சந்திப்பு (4ஆம் ரயில்வே கேட் ஓடை பாலம் அருகில்) பக்கிள் ஓடை விரிவாக்கப் பணிக்கான அடிக்கல் நாட்டி பணியினை துவக்கி வைத்தார். தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட எழில்நகர் - எஸ்.கே.எஸ்.ஆர் காலனி பகுதியில், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.33.50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுத் திடலை, திமுக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி திறந்து வைத்தார்.

தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் மாநகராட்சி ஆணையர் ப்ரியங்கா மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



வந்தே மாதரம் பாடலின் 150வது ஆண்டு நிறைவை முன்னிட்டு. மத்திய தொழில் பாதுகாப்புப் படை (CISF) தேசிய அளவிலான மக்கள் தொடர்பு மற்றும் விழிப்புணர்வு முயற்சியாக "வந்தே மாதரம் கடற்கரை விழிப்புணர்வு சைக்கிள் பேரணி" நடத்தியது. கூடன்குளம் நுழைவுவாயிலில் இருந்து CISF உதவி தளவாய் சித்தாந்த் கோ சுவாமி தலைமையில் 25 பேர் சைக்கிளிலும், 60 பேர் வாகனங்களிலும் புறப்பட்டனர். ஆரோக்கியபுரம் வழியாக சின்னமுட்டம் துறைமுகம் சென்ற அவர்களுக்கு கடலோர பாதுகாப்பு ஆய்வாளர் சாந்தி தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பல்வேறு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (20.02.2026) அன்று நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தென்னையினை தாக்கும் பூச்சிகள் மற்றும் அதனை கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணிகள் குறித்த விவசாய பெருமக்களுக்கான விழிப்புணர்வு கருத்துக்காட்சி அரங்கினை பார்வையிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் மா.குரு சரஸ்வதி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (21.02.2026) நேற்று செங்குந்தர் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பாரத சாரண சாரணியர் இயக்கம் சார்பில், சர் லார்டு பேடன் பவல் அவர்களின் 169 வது பிறந்தநாள் விழா, 100 வது உலக சிந்தனை நாள் முப்பெரும் விழாவில் சாரண, சாரணிய பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்கள் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார். உடன் முதன்மை கல்வி அலுவலர் முனைவர் இ.மான்விழி உட்பட பலர் உள்ளனர்.

# தூத்துக்குடியில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்ட டிஜிட்டல் தளம் கலெக்டர் இளம்பகவத் தொடங்கி வைத்தார்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்ட நிர்வாகம் மற்றும் 'அஹோப்' (aHOPE) நிறுவனம் இணைந்து மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காக உருவாக்கியுள்ள 'சிறப்பு வாழ்வாதாரத் திட்டம்' (Special Livelihood Initiative - SLI) மற்றும் அதற்கான பிரத்யேக இணையதளத்தை மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் தொடங்கி வைத்தார்.

கிராமப்புறப் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், அவர்களுக்கு நிலையான வருமான வாய்ப்புகளை உருவாக்கவும் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. சுமார் 170 கோடி மதிப்பிலான நிதித்திரட்டலுடன், மாவட்ட ஆட்சியரின் நேரடித் தலைமையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு மாடு, ஆடு மற்றும் கோழி வளர்ப்பு போன்ற தொழில்களுக்காகச் சிறு கடன்கள் வழங்கப்படுகின்றன. அஹோப் (aHOPE) எனும் 'பின்டெக்' (FinTech) நிறுவனம் மூலம், பயனாளி பதிவு முதல் உற்பத்திப் பொருட்கள் சந்தைப்படுத்துதல் வரை அனைத்தும் டிஜிட்டல் முறையில் கண்காணிக்கப்படும்.

வெளிப்படைத்தன்மை: வங்கிகள், ஊராட்சி கூட்டமைப்புகள் (PLF) மற்றும் கொள்முதல் செய்பவர்கள் என அனைத்துப் பங்குதாரர்களும் இத்தளத்தின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர்.

20 கோடி கடன் வழங்கப்பட்டு, 95 சதவீதத் திருப்பிச் செலுத்தல் விகிதம் எட்டப்பட்டுள்ளது. 100 ஊராட்சி கூட்டமைப்பு உறுப்பினர்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்தளம் மூலம் கால்நடை ஆரோக்கியத்தைக் கண்காணித்தல், காப்பீடு பெற உதவுதல் மற்றும் ஆவின் மூலம் பால் கொள்முதலை ஒருங்கிணைத்தல் போன்ற பணிகள் எளிதாக்கப்பட்டுள்ளன. பயனாளிகள் தங்கள் கடன் விவரங்கள் மற்றும் திருப்பிச் செலுத்தும் நிலையை உடனுக்குடன் தெரிந்துகொள்ளலாம்.

இத்திட்டம் குறித்த கூடுதல் விவரங்கள் மற்றும் வழிமுறை கையேடுகளை https://linktr.ee/ahope2026 என்ற இணையதளம் அல்லது க்யூஆர் கோடு (QR Code) வாயிலாகப் பொதுமக்கள் அறிந்துகொள்ளலாம் என ஆட்சியர் தெரிவித்தார். இந்நிகழ்வில் பயிற்சித் துணை ஆட்சியர் மகேந்திரன், அஹோப் நிறுவனத் தலைவர் அஜித் மத்தாய் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூகநீதி சபை மற்றும் யுனெடட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டியின் தேசிய தலைவர் ஆர்.செல்வகணேசன் ஆலோசனை மற்றும் மாநில தலைவர் ஆர். தன்ராஜ் வழிகாட்டுதலுடன் மாவட்ட தலைவர் ஜெ.கோபிநாதன், மாவட்ட செயலாளர் டாக்டர் G தங்கவேல், மாவட்ட பொருளாளர் கு.கோபிநாத் ஏற்பாட்டின் "ஸ்ரீஅன்னை ஜே கே கே சம்பூரணியம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாம் ஆண்டு துறைத்தலைவர் பேராசிரியர் P. ஆறுச்சாமி அவர்களின் நீண்ட கால கல்வி மற்றும் சமூகத்தின் பல்வேறு சேவைகளின் அடிப்படையில் கௌரவிக்கும் விதமாக "நேதாஜியின் சிறப்பு விருது" மாவட்ட செயலாளர் டாக்டர் G தங்கவேல் வழங்கி கௌரவித்தார்.

# கன்னியாகுமரி மாவட்டத்தில் கஞ்சா மற்றும் விற்பனைக்கு பயன்படுத்திய 2 இருசக்கர வாகனங்கள் பறிமுதல்; மூன்று பேர் கைது




கன்னியாகுமரி மாவட்டத்தில் கஞ்சா, குட்கா, புகையிலை போன்ற போதை பொருட்களுக்கு எதிராக மாவட்ட காவல் கண்காணிப்பாளர். ஸ்டாலின் கடுமையான தொடர் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். அதன் தொடர்ச்சியாக நாகர்கோவில் சுற்றுவட்டார பகுதிகளில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக மதுவிலக்கு போலீசாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை மேற்கொண்டனர்.

சோதனையில் 1 கிலோ 360 கிராம் எடை கொண்ட அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா மற்றும் 2 இரண்டு சக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அதில் சாமிதோப்பு பகுதியை சேர்ந்த கணபதி என்பவரது மகன் தனுஷ் கிருஷ்ணா (22), பீச் ரோடு பகுதியை சேர்ந்த மணிகண்டன் என்பவரது மகன் விஷால் (18) மற்றும் ஒடிசா மாநிலத்தை சேர்ந்த ராஜேஷ் சவுகான் ஆகியோரிடம் இருந்து 1 கிலோ 360 கிராம் கஞ்சா மற்றும் 2 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த கைது நடவடிக்கையானது மேலும் தீவிரபடுத்தப்படும் என்றும், கஞ்சா விற்பனை செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்படுகிறது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் (21.2.2026) மதுரை, ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள HP கணினி திறன் மேம்பாட்டு மையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், கு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்கள் கே.என்.நேரு, மாண்புமிகு எ.வ.வேலு, பி.மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி, அ. வெங்கடேசன், எம்.பூமிநாதன்,, உள்ளாட்சிஅமைப்புகளின்பிரதிநிதிகள்மற்றும்அரசுஉயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் (21.2.2026) மதுரை, ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள HP கணினி திறன் மேம்பாட்டு மையத்தை திறந்து வைத்து மாணவியர்களிடம் உரையாடினார்.



ஈரோடு அருள்மிகு திண்டல் வேலாயுத சாமி திருக்கோவிலில் நாளை நடைபெரும் குடமுழுக்கு விழாவை ஒட்டி அங்கு நடைபெற்று வரும் பணிகளை தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் பார்வையிட்டார்.அதனைத் தொடர்ந்து கோவிலில் அன்னதானம் வழங்குவதற்காக சமையல் செய்வதற்காக பூஜையை துவக்கி வைத்தார்.இந்த நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் மற்றும் பலர் உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (20.02.2026) அன்று பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் நடைபெற்ற 202526 ஆம் ஆண்டு இலக்கிய மன்றம், வினாடி வினா மன்றம் மற்றும் சிறார் திரைப்படம் மன்றம் போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு புத்தகங்கள் வழங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

## ஈரோடு மாவட்டத்தில் ஆறு மாதம் முதல் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு 23ம் தேதி வைட்டமின் ஏ திரவம் வழங்கும் முகாம் நடைபெற உள்ளது

### கலெக்டர் கந்தசாமி அறிவிப்பு



வைட்டமின் ஏ திரவம் ஈரோடு மாவட்டத்தில் ஆறு மாதம் முதல் ஐந்து வயதுக்கு உட்பட்ட 1,09,118 குழந்தைகளுக்கு 2,080 அங்கன்வாடி மையங்கள் மற்றும் 378 துணை சுகாதார நிலையங்களில் வழங்கப்பட உள்ளது. இந்தியாவில் வைட்டமின் ஏ குறைபாடு பாதிப்பு உள்ளவர்கள் 17.54 விழுக்காடு. தமிழ்நாட்டில் வைட்டமின் ஏ குறைபாடு பாதிப்பு உள்ளவர்கள் ஏழு விழுக்காடு ஆவர். இது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

வைட்டமின் ஏ சத்து கண்களில் விழித்திரை நிறமிகளை உற்பத்தி செய்து குறைவான வெளிச்சத்தில் பார்ப்பதற்கும், வண்ணங்களை காண்பதற்கும், குடல், சிறுநீரகம், சுவாசப்பாதைகள் தோல் மற்றும் கண்களில் மேலடுக்கு திசுக்களை பராமரிப்பதற்கும் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குவதற்கும்,மூச்சுக்குழாயில் ஏற்படும் எபிதீலியல் புற்றுநோயை தடுப்பதற்கும் பயன்படுகிறது.

வைட்டமின் ஏ சத்தானது அடர்பச்சை நிற கீரைகள் மற்றும் மஞ்சள் நிற பழங்கள், காய்கறிகள், மீன், இறைச்சி, முட்டை, பால் மற்றும் செறிவூட்டப்பட்ட எண்ணெய்களில் உள்ளது. வைட்டமின் ஏ குறைபாட்டினால் குழந்தைகளுக்கு பார்வை குறைபாடு, வயிற்றுப்போக்கு மற்றும் தீவிர சுவாச தொற்று நோய் ஏற்படுகிறது. எனவே வைட்டமின் ஏ குறைபாடு நோய்களை வராமல் தடுப்பதற்காக வைட்டமின் ஏ திரவம் வழங்கும் முகாம் வருடத்தில் இரு முறை நடைபெறுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் இம்முகாம் 23.02.2026 திங்கள் கிழமை முதல் 28.02.2026 சனிக்கிழமை வரை (புதன் நீங்கலாக) அங்கன்வாடி மையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் நடைபெற உள்ளது. ஆறு மாதம் முதல் 11 மாதம் வரையுள்ள குழந்தைகளுக்கு 1 ml மற்றும் 12 மாதம் முதல் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 2 ml வைட்டமின் ஏ திரவம் வழங்கப்பட உள்ளது.

23.02.2026 5 28.02.2026 வரை நடைபெற உள்ள முகாம்களில் அன்று பொதுமக்கள் அனைவரும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வைட்டமின் ஏ திரவம் பெற்று பயன் பெறுமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

## நந்தா பொறியியல் கல்லூரியில் கருடா26 தொழில்நுட்ப கலாச்சார விழா

ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரியின் வெள்ளி விழா ஆண்டினை முன்னிட்டு மாணவர்களின் கல்வி, ஆராய்ச்சி மற்றும் கலைத் திறமைகளை வெளிகொணரும் பொருட்டு இரண்டு நாட்கள் கொண்ட "கருடா'26" என்கிற தலைப்பில் தொழில்நுட்ப கலாச்சார விழாஇனிதேதுவங்கியது.




ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் வி. சண்முகன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவினை அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன் குத்துவிளக்கேற்றிதுவக்கி வைத்தார்.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ். நந்தகுமார் பிரதீப், எஸ். திருமூர்த்தி, கல்லூரியின் முதல்வர் முனைவர் யு.எஸ். ரகுபதி மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே. வேலுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

முதல்நாளன்று,ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரியின் இடைநிலை ஆராய்ச்சி மையம் மற்றும் இந்திய கல்வி அமைச்சகத்தின் நிறுவனங்களின் கண்டுபிடிப்பு மன்றம் சார்பில் மாணவர்களின் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப புதிய கண்டுபிடிப்புகளின் தகவல்கள் பகீர்தலுக்கான தொடர்ச்சியாக 24 மணி நேரம் கொண்ட "மெக்கத்தான்'26" துவங்கியது.

இதில் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப தகவல்களை பகீர்தலுக்காக உருவாக்கம் செய்யப்பட்ட கணினி, மின்னியல் மற்றும் மின்னணுவியல், மின்னியல் மற்றும் மின்னணுவியல் இல்லாத துறைகள் என 120 மாணவர்கள் 30 குழுக்களாகக் கொண்டு புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க இருக்கிறார்கள்.

முடிவில், ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இதனைத் தொடாந்து மாலையில்,இசை நிகழ்ச்சியின் பிரபல தொகுப்பாளர் மதன் டி.ஜே பங்கு பெறும் நேரலை இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாணவர்கள் இசைக்கேற்ப ஆடிப் பாடி உற்சாகம் அடைந்தார்கள்.

இரண்டாம் நாளன்று, மாணவர்களின் ஆராய்ச்சி திறமையின் பயனாக உருவாக்கப்பட்ட பல்வேறு வகையான படைப்புகள் அடங்கிய கண்காட்சியினை தமிழ்நாடு ஸ்டார்ட் அப் இயக்கத்தின் பணி இயக்குனர் சிவராஜ ராமநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி துவக்கி வைத்து பார்வையிடுகிறார்.

மேலும், இத்திருவிழாவிற்கான ஏற்பாடுகளை சிறப்பாக ஒருங்கிணைந்து செயல்புரிந்த நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் மாணவர்கள் நலன் துறைத் தலைவர் கே. குணசேகர் மற்றும் பொறியியல் கல்லூரியின் மாணவர்களின் விவகாரத் துறைத் தலைவர் முனைவர்.எம்.கே.மூர்த்தி உட்பட ஏனைய பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு நந்தா கல்வி நிறுவனங்களின் அங்கத்தினர்கள் தங்களது வாழ்த்துக்களையும் நன்றினையும் தெரிவித்தார்கள்.

## சால்வை அணிவிப்பதுபோல் நடித்து திமுக நிர்வாகிக்கு கத்திக்குத்து; திண்டுக்கல் அருகே பரபரப்பு



திண்டுக்கல் அருகே வேடசந்தூரில் சால்வை அணிவிப்பது போல் வந்துதிமுகநிர்வாகியை கத்தியால் குத்திய நபரால் பரபரப்பு ஏற்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் திமுக (தெற்கு) ஒன்றியச் செயலாளராக இருப்பவர் வீரா.சாமிநாதன். இவர் கல்வி நிறுவனம் நடத்தி வருகிறார். இவரது வீடு வேடசந்தூர் கொங்கு நகரில் உள்ளது. வீட்டில் வைத்து நிர்வாகிகளை சந்தித்து கொண்டிருந்தார். அப்போது, சால்வை அணிவிப்பது போல் வந்து, மறைத்து வைத்திருந்த கத்தியால் மர்ம நபர், வீரா.சாமிநாதனின் கழுத்தில் குத்தினார். தடுக்க சென்ற நாச்சிமுத்து என்பவரையும் அந்த மர்ம நபர் கத்தியால் குத்தினார். அங்கிருந்த திமுகவினர் அந்த நபரை சுற்றி வளைத்து கூம்பூர் போலீஸில் ஒப்படைத்தனர். மேலும், காயமடைந்த வீரா. சாமிநாதன், நாச்சிமுத்து ஆகியோரை திண்டுக்கல்லில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. போலீஸார் விசாரணையில், கத்தியால் குத்திய நபர் எரியோடு பகுதியை சேர்ந்த மணிகண்டன் (40) என்பது தெரியவந்துள்ளது. தொடர்ந்து, அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் வேடசந்தூர் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## பாகிஸ்தானில் மீண்டும் நிலநடுக்கம்



வடக்கு மற்றும் வடமேற்கு பாகிஸ்தானின் சில பகுதிகளில் சனிக்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 4.4ஆகப் பதிவானதாக இஸ்லாமாபாத்தின் தேசிய நில அதிர்வு கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் இந்த நிலநடுக்கத்தால் எந்த பாதிப்பும் ஏற்பட்டதாக உடனடித் தகவல் இல்லை. உள்ளூர் நேரப்படி காலை 9:30 மணிக்கு ஏற்பட்ட நிலநடுக்கமானது, அட்டோக்கின் புர்ஹானுக்கு வடகிழக்கே 11 கிமீ தொலைவிலும் 14 கிலோமீட்டர் ஆழத்திலும் மையம் கொண்டிருந்தது.

மேலும் கைபர் பக்துன்க்வாவின் சிலபகுதிகளிலும், இஸ்லாமாபாத் மற்றும் ராவல்பிண்டியிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது. கைபர் பக்துன்க்வாமற்றும்பஞ்சாப் மாகாணங்களின் சில பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்ட 24 மணி நேரத்திற்குள் சனிக்கிழமை மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. முன்னதாக வெள்ளிக்கிழமை பெஷாவர் மற்றும் இஸ்லாமாபாத் உட்பட பல நகரங்களில் நிலநடுக்கம் உணரப்பட்டது. இமயமலையில் வடக்கு பாகிஸ்தான் அமைந்திருப்பதால், அங்கு நிலநடுக்கங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன.

பாகிஸ்தானில் 2005ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சுமார் 74,000 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் (20.02.2026) அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், நடைபெறவுள்ள மார்ச் 2025 2026 ஆம் ஆண்டுக்கான பொதுத்தேர்வுகள் பத்தாம் வகுப்பு, மேல்நிலை இரண்டாமாண்டு மற்றும் இடைநிலைப் பொதுத்தேர்வு தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து, அனைத்து அலுவலர்களுடனான ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றது.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (21.02.2026) செங்குந்தர் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பாரத சாரண சாரணியர் இயக்கம் சார்பில், சர் லார்டு பேடன் பவல் அவர்களின் 169 வது பிறந்தநாள் விழா, 100 வது உலக சிந்தனை நாள் முப்பெரும் விழாவில் தேசியக்கொடி மற்றும் சாரணக்கொடியை ஏற்றி வைத்து, மரியாதை செலுத்தினார். உடன் முதன்மை கல்வி அலுவலர் முனைவர் இ.மான்விழி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (20.02.2026) பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் நடைபெற்ற 2025, 26 ஆம் ஆண்டு இலக்கிய மன்றம், வினாடி வினா மன்றம் மற்றும் சிறார் திரைப்படம் மன்றம் ஆகிய போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்தார். உடன் முதன்மைக்கல்வி அலுவலர் மான்விழி உட்பட பலர் உள்ளனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.